ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11,699 — 1959 මාර්තු 13 වැනි සිකුරාදා — 13.3.1959**

11,699 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனப் பகுதி

நீர்ப்பாசன இலாக்காவில் ரூபாய் 20,000 அல்லது மேலதிகமாகப் பதியப் பட்டிருக்கும் ஒப்பந்தக்காரரிடமிருந்து கந்தளாய் நீர்ப்பாசனத் திட்டத் தின் கீழ் ஒரு ஓவசியர் வீடு கட்டுவதற்காக 31.3.59 காலை 9.30 மணிவரை திருகோணமலையில் உள்ள பெரும்பாக நீர்ப்பாசன எஞ்சினியரால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபாய் 25.00 கட்டித் தேவையான கேள்விப் பத்திரங்களை கந்தளாய்த் திட்டத்தில் உள்ள நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து 24.3.59 தொடக்கம் 27.3.59 வரை பெற்றுக்கொள்ளலாம்.

---

### அரசாங்க நீர்ப்பாசன இலாக்கா

வடமேல் மாகாணப் பிரிவு குருனுகல் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினிய ரிடமிருந்து குருனுகலில் இருக்கும் கக்வட்டுன ஓய 1 ம், 2 ம் பிரிவு வேலைக்கு ரூபா 10,000 த்துக்கும் 3 ம் பிரிவு வேலைக்கு ரூபா 20,000 த்துக்கும் அதற்கு மேலும் இவ்விலாக்காவில் பதிவு செய்யப் பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 25 ம் திகதி, புதன்கிழமை காலை 9.30 மணிவரையும் பெற்றுக் கொள்வார்.

வேலைகளின் விபரம் பின்வருமாறு :—

(1) 6,000 பொளிந்த கல் கொடுத்தல் ;

(2) மேல் குறிப்பிடப்பட்டு இருக்கும் வேலை இடத்துக்கு குருனுகல் றயில்வே ஸ்டேசனில் இருந்து வேலைக்குரிய சாமான்கள் ஏற்றுதல் ;

(3) நுண்தொழில் உதவியாளர்களுக்கு சிறு நிரந்தர இரண்டு பங்களா கட்டுதல்.

இதைப்பற்றிய விபரங்களும் படங்களும் கக்வட்டுன ஓயவில் இருக்கும் நீர்ப்பாசன அதிகாரியிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப் பிட்ட தொகைக்கு ஒப்பந்தக்காரர்கள் என விபரங்கள் யாவும் அறிந்த பின்பே கேள்விப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 23 ம் திகதி பகல் 12 மணிக்குக் கொடுக்கப்படும்.

விண்ணப்பக்காரர்கள் யாவும் ரூபா 25.00 கச்சேரியில் பிணைகட்டி விட்டு அதன் அத்தாட்சிச் சீட்டு கொண்டு காண்பிக்க வேண்டும்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
கக்வட்டுன ஓய காரியாலயம்.

நீர்ப்பாசன காரியாலயம்,
கக்வட்டுனஓய, மக்குள் பொத்த.

---

### உணவுப் பகுதி — கோரிக்கை விளம்பரம்

1959 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ந் திகதிக்கும், 1959 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதிக்குமுள்ளான காலத்தில் கீழ்க்காணும் சேவைகள் புரிவதற்கான கோரிக்கைகள் விவசாய உணவு அமைச்சின் கோரிக்கைச் சபைத் தலைவரால், தபால் பெட்டி இலக்கம் 564, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்னும் விலாசத்தில் 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ந் திகதி பி.ப. 2.30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**சேவை**

பிரதானமாக அரிசி, மா, சீனியைக் கொண்ட உணவுப் பொருட்களை கொழும்புத் துறைமுகத்திலுள்ள ஏற்றிறக்குமதி பண்ணும் செய்கரையி லிருந்து உணவு அதிகாரியின் பண்டசாலைகளான பூந்தோட்டம், வெள்ள வத்தை, மாளிகாவத்தை, கொலன்னவை, பெப்பிலியானை, மனிங் மார்க் கட், வியாங்கொடை முதலிய இடங்களுக்கு லொறிகள் மூலம் கொண்டு செல்லல்.

முழுத்தூரத்திற்கும் மூடை ஒன்றிற்கான தொகையும், ஒரு மைலுக் குத் தொன் ஒன்றுக்கான தொகையும் மேற்கோள் செய்யப்படல் வேண் டும். பொதுவாக அரிசி 160 இறுத்தல்கள் அடங்கிய மூடைகளாகவும், 224 இறுத்தல்கள் அடங்கிய மூடைகளாகவும், மா 150 இறுத்தல்கள் அடங்கிய மூடைகளாகவும் இருக்கும். வேண்டியுள்ளபடி குறைந்தது 10 லொறிகளைச் சொந்தமாக உடையவராகவும் அல்லது வாடகைக்கமர்த் தும் தரமுடையவராகவும், தங்கள் வசமுள்ள போக்கு வரத்து வசதி களுடன் ஒப்பந்தத்தை நிவிர்த்தி பண்ணக்கூடிய நிலைமையில் உள்ளவர் கள் இடமிருந்து மட்டுமே கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரைக்கும் யூனியன் பிளேஸ், கொழும்பு 2 இல் உள்ள உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் (இரு பிரதிகளில்) விண்ணப்பம் செய்யப்படவேண்டும். உணவு அதிகாரி யிடம் தங்குபணமாக ரூ. 100 கொடுத்துப் பெற்ற பற்றுச்சீட்டைக் காண்பித்தும், உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விளம் பரங்களடங்கிய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அங்கம் 4 ன், 2 ம், 3 ம் பகுதிகளை நிவிர்த்தி செய்வதன் மூலமும் கோரிக்கைப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் தேவையான விபரங்களை உணவு அதிகாரியின் காரியாலயத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

உணவு அதிகாரியின் காரியாலயம்,
330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
1959 ம் ஆண்டு மார்ச் மீ 6 ந் வ.

கே. எம். டீ ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

---

### உணவுப் பகுதி—அரிசி விற்பனை

543 தொன் ஸ்பானிய எகிப்திய அரிசி, மாளிகாவத்தை பண்டசாலைகளில் இலங்கையரால் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் விவசாய உணவு அமைச்சின் கோரிக்கைச் சபைத் தலைவரால் 1. 4. 59 ந் திகதி பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

உள்ளூரில் தனிப்பட்ட வியாபாரம் செய்வதற்கு விசேட பதிவு செய் வதன் மூலம் அனுமதிக்கப்படுமாயினும், அரிசி விற்பனை 3 மாதங் களில் செய்யப்படல் வேண்டும் கொள்பவர்கள் விரும்பின் ஏற்றுமதி செய்வதற்கான அதிகாரப்பத்திரம் வழங்கப்படும்.

கோரிக்கைகள் ஐந்து; ஒவ்வொன்றும் 100 தொன் கொண்ட கூறுகளுக் கும் ஒரு 43 தொன் கொண்ட கூறுகளுக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். கோரிக்கை விகிதத்துடன் அந்தர் ஒன்றிற்கு சதம் 05 சுமை கூலி யாக விதிக்கப்படும். கோரிக்கை ஏற்கப்பட்ட மூன்று வாரங்களுக்குள், கொள்வனவு செய்யப்பட்ட விலை செலுத்தப்பட்டு அரிசி அப்புறப்படுத்தல் வேண்டும்.

இக்காரியாலத்தில் ரூபா 250 தங்கு பணமாகக் கொடுப்பதன் மூலம் பெறும் விண்ணப்பப் பத்திரங்களில் கோரிக்கை செய்யப்பட வேண்டும். சித்தியடையாத கோரிக்கைக்காரர்களுக்கு தங்கு பணம் திருப்பிக்கொடுக் கப்படும்.

மற்றும் தேவையான விபரங்களை கீழ் கையொப்பமிட்டிருப்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கொழும்பு,
1959 ம் ஆண்டு மார்ச் மீ 10 ந் வ.

ஜே. எச். லனெரோல்,
உணவு அதிகாரிக்காக.

---

### விற்பனை விளம்பரம்

**அம்பலாந்தோட்டை அரசாங்க அரிசி ஆலையிலுள்ள தவிடு (2 ம் நம்பர்)**

அம்பலாந்தோட்டையிலுள்ள அரசாங்க அரிசி ஆலையிலிருக்கும் இரண் டாம் நம்பர் தவிட்டை வாங்கி அப்புறப்படுத்துவதற்குரிய கேள்விப்பத்திரங் களை மாத்தறையிலுள்ள உதவி கமத்தொழிற் சேவை அதிபர், 1959 ம்

ஆண்டு மார்ச் மாதம் 25 ந் திகதி, புதன்கிழமை பிற்பகல் 2 மணி வரை ஏற்றுக்கொள்ளுவார். அம்பலாந்தோட்டை அரசாங்க அரிசி ஆலையின் மனேஜரிடம் தவிட்டின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பொழுது கிடைக்கக்கூடிய தொகை 1,000 அந்தர் வரை இருக்கும். 1959 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் 500 அந்தர் வரை கிடைக்கும். விண்ணப்பக்காரர்கள் தங்கள் விலைகளை குறிக்கும் பொழுது—(a) சாக்குகள் உட்படவும் (b) சாக்குகளில்லாமல் (அதாவது தவிட்டுக்கு மாத்திரம்) குறிக்க வேண்டும். கிழமைக்கொரு முறை கிடைக்கக் கூடிய தவிட்டுக்கு பணத்தைக் கொடுத்துத் தவிட்டை அப்புறப்படுத்த வேண்டும்.

க. சிற்றம்பலம்,
கமத்தொழிற் சேவை அதிபருக்காக.

கமத்தொழிற் சேவைப் பகுதி,
த. பெ. இலக்கம் 579, கொழும்பு,
1959 ம் ஆண்டு மார்ச்மீ 3 ந் வ.

---

## நல்லொழுக்க விசாரணை சிறுவர் பரிபாலன சேவைப் பகுதி

அச்சுவேலி பேண்காம் பாடசாலையில் ஒரு கிணறு வெட்டுவதற்கென கேள்விப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் வெள்ளிக்கிழமை 20 ம் திகதி, முற்பகல் 12 மணிவரையில் யாழ்ப்பாண தலைமைப் பாதுகாவல் உத்தியோகத்தரால் ஏற்றுக் கொள்ளப்படும். மேலும் தேவையான விபரங்களை அன்னாரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ம. சிவநாதன்,
நல்லொழுக்க விசாரணை சிறுவர்
பரிபாலன சேவை அதிகாரி.

1959 ம் ஆண்டு பங்குனி மீ 6 ந் வ.

---

## சிறைச்சாலைப் பகுதி

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலுள்ள சற். 9775 ம் இலக்க "மொரிஸ் கொம்மேர்ஷல்" வான் வண்டி, 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 28 ந் திகதி மு.ப. 10.30 மணிக்கு, யாழ்ப்பாணம், கோட்டையிலுள்ள யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் பொது ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஏலத்தைப் பெறுபவர் விற்பனை முடிந்ததும் முழுத்தொகையையும் உடனே கட்டி 3 நாட்களுள் வான் வண்டியை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

வாகனத்தை மேற்படி சிறைச்சாலையில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 4 மணிக்கும் இடையில் கிழமை நாட்களில் எந்த நாளிலும் பார்வையிடலாம்.

பி. ஜே. எஸ். டி. சற். ஆடிகெத்தி,
யாழ்ப்பாணச் சிறைச்சாலை பதில் அத்தியட்சகர்.

யாழ்ப்பாணச் சிறைச்சாலை,
கோட்டை, யாழ்ப்பாணம்,
1959 ம் ஆண்டு மாசி மீ 26 ந் வ.

---

## விளம்பரம்

1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், 1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதத்தின் நான்காம் வாரத்திற்குரிய இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 26 ந் திகதி வியாழக் கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 23 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 10 ந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது